## மே - 20 - சனி

### புனித சியன்னா பேனடின்

### அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்! திபா. 100:1

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 16 : 1 – 10**

அக்காலத்தில் பவுல் தெருபை, லிஸ்திரா ஆகிய நகர்களை வந்தடைந்தார். லிஸ்திராவில் திமொத்தேயு என்னும் பெயருள்ள சீடர் ஒருவர் இருந்தார். அவருடைய தாய் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட ஒரு யூதப்பெண். தந்தையோ கிரேக்கர். திமோத்தேயு லிஸ்திராவிலும், இக்கோனியாவிலுமுள்ள சகோதரர் சகோதரிகளிடையே நற்சான்று பெற்றவர். பவுல் அவரைத் தம்முடன் கூட்டிச்செல்ல விரும்பினார். அவ்விடங்களிலுள்ள யூதரின் பொருட்டு அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார். ஏனெனில் அனைவரும் அவருடைய தந்தை கிரேக்கர் என்று அறிந்திருந்தனர். அவர்கள் நகர் நகராகச் சென்றபோது எருசலேமிலுள்ள மூப்பரும் திருத்தூதரும் செய்த தீர்மானங்களை அவர்களிடம் கொடுத்துக் கடைப்பிடிக்குமாறு கூறினார். இவ்வாறு திருச்சபைகள் நம்பிக்கையில் உறுதி பெற்று நாளுக்கு நாள் எண்ணிக்கையில் பெருகிவந்தன. பின்பு ஆசியாவில் இறை வார்த்தையை அறிவிக்காதவாறு தூய ஆவியார் தடுக்கவே, அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து சென்றனர். அவர்கள் மீசியா அருகே வந்து பித்தினியாவுக்குச் செல்ல முயன்றபோது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்குப் போகவிடவில்லை. எனவே அவாகள் மீசியா வழியாகச் சென்று துரொவா நகரை அடைந்தனர். பவுல் அங்கு இரவில் ஒரு காட்சி கண்டார். அதில் மாசிதோனியர் ஒருவர் வந்து நின்று, "நீர் மாசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்" என்று வேண்டினார். இக்காட்சியைப் பவுல் கண்டதும், நாங்கள் மாசிதோனியருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார் என எண்ணி, அங்குச் செல்ல வழி தேடினோம்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்

**நற்செய்தி : யோவான் 15 : 18 – 21**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, உலகு உங்களை வெறுக்கிறதென்றால் அது உங்களை வெறுக்கு முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது. பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள். என் வார்த்தையைக் கடைப்பிடித்திருந்தால் தானே உங்கள் வார்த்தையையும் கடைப்பிடிப்பார்கள்! என் பெயரின் பொருட்டு உங்களை இப்படியெல்லாம் நடத்துவார்கள். ஏனெனில் என்னை அனுப்பியவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை" என்றார்.

**தியானம்:** நம்பிக்கை என்பது எமது வாழ்க்கைக்கு முக்கியமான தொன்றாகும். அந்நம்பிக்கையில் நாங்கள் நிலைத் திருந்தோமேயாகில் தாயின் கருவறையில் உருவாகும் முன்பே தெரிந்தெடுத்த இறைவன் நாமும் அவரைப்பற்றி அறிவிக்க நல்லது எது கெட்டது எது என்று அறிந்து வழிநடக்க தூய ஆவியாரை அனுப்பி வழிநடத்துவார். நாம் இறைவனது ஆசீர்வாதத்தின் நிமித்தம் அவருக்கு பணிவிடை செய்வோமானால், பலவகையான இடஞ்சல்கள், இடையூறுகள் வரத்தான் செய்யும். இவை யாவற்றையும் ஏற்று செயற்பட வேண்டுமென்று கூறுகின்றார். அத்துடன் எங்கு செல்ல வேண்டும், எந்த இடங்களில் தன்னைப் பற்றி அறிவிக்க வேண்டும் என்று தூய ஆவியார் வழிநடத்துவார் என்பதனை "ஆசியாவில் இறைவார்த்தையை அறிவிக்காது தூய ஆவியானவர் தடுத்து நிறுத்தினார் (தி.ப.16:6) என்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார். இன்று எங்கள் மத்தியில் ஆவியானவர் செயல்பட வேண்டுமென்றால், அவரைப்பற்றி நாமும் அறிவிக்க வேண்டுமென்றால் உண்மையின் தேவன், பரிசுத்தத்தின் தேவன், தூய்மையின் தேவன் எங்கள் கூட இருந்து எங்களை வழிநடத்துகின்றார் என்று நம்பி ஏற்று வாழவேண்டும். இதன்மூலமாக பலா் நம்மை வெறுக்கலாம், ஒதுக்கிவிடலாம் ஆனால் கிறிஸ்து இயேசுவோ ஒருபோதும் கைவிடமாட்டார் என்பதை மனதில் கொள்ள வேண்டும். "ஏனெனில் நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல என்னைச் சார்ந்தவர்கள்" (யோவான்15:18) எனவே அவரில் நம்பிக்கை கொண்டவர்களாக எவ்வகையான சூழலிலும் இயேசு நம்மோடு இருக்கின்றார் என்று உறுதியுடன் மற்றவர்களுக்கு அவரைப்பற்றி அறிவிக்க இன்றைய நாளில் முடிவெடுப்போம்.